**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No. 173/2025
Prosecution witnesses. PW1, LW1

| | |
|---|---|
| பெயர். திரு. முத்து | ஜாதி. |
| தந்தை பெயர்.திரு.சுப்பரயன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 20th day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது செய்யூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 17.02.2025 ம் தேதியில் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது நான், காவல் ஆய்வாளர் திருமதி.மங்களபிரியா மற்றும் தலைமை காவலர் 1352 ராஜேஷ் ஆகியோருடன் மதுவிலக்கு வேட்டையாக சூணாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 16.00 மணிக்கு கொளத்தூர் கிராமம் சென்று ஒரு வீட்டின் அருகே இருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நீதிமன்ற ஆஜர் எதிரி தனுஷ், வயது 28, த/பெ.சந்திரன், எம்.ஜி.ஆர் தெரு, கொளத்தூர் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்பவரை பிடித்து அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்பாணையில் சுமார் 12 லிட்டர் பனங்கள் இருந்தது. அதை முகர்ந்து பார்த்தபோது புளித்த வாடையுடன் வாய்குமட்டலும் வந்ததால் அவர் பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது

தெரிந்தது. மேற்படி குற்றத்திற்காக எதிரியை 16.15 மணிக்கு கைது செய்து எதிரியிடமிருந்து பனங்கள்ளை உடன் வந்த எங்கள் முன்னிலையில் மேற்படி பனங்கள்ளை பகல் 16.30 மணிக்கு மேற்படி ஆய்வாளர் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். (**மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 16.45 மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் பாதுகாப்பான முறையில் மேற்படி பனங்கள்ளை சம்பவ இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டது. பானை உடைக்கப்பட்டது. (**அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி இரண்டு மகசருடன் என்னுடன் வந்த தலைமை காவலர் ராஜேஷ் என்பவரும் கையெழுத்து செய்தார். எதிரியை கைது செய்து நிலையம் வந்து 17.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. பொதுமக்கள் சாட்சிகளை யாரையாவது விசாரித்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எங்கள் ஆய்வாளர் போட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் எங்கள் ஆய்வாளர் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பார் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.